# இரவில் சிறகுவலையுடன் செல்வோர் கைதாவர்

Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49 மலர் 9
போன் 389 National Tamil Daily இதழ் 208
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஆவணி 22 ஐ அல் 2 வியாழக்கிழமை [7-9-·7]

## திருட்டைத்தடுக்க பொலிஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம், வியாழன் சிறகுவலைகளைக் கொண்டு எந்த மீனவரும் மாலை 6 மணியிலிருந்து காலை 3 மணிவரை வீதிகளிலாயினும், வளாங்களிலாயினும் செல்ல முடியாதெனவும் அப்படிச் செல்பவர்களைப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்யலாமெனவும் பொலிஸ் பகுதியினர் அறிவித்துள்ளனர். வடபகுதியில் அதிகமாக நடைபெறும் சிறகு வலைத் திருட்டைத் தடுக்குமுகமாக நேற்றுக்காலை நடைபெற்ற மகாநாட்டின் பின்னரே இம்முடிவு தெரிவிக்கப்பட்டது.

வடகுதி பொலிஸ் சுப்பிரின்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் தமிழ் காங்கிரஸ் கட்சியின் சார்பில திரு. பரமானந்தராஜா தமிழரசுக்கட்சியின் சார்பில் திரு. சிக்மறிங்கம

[6-ம் பக்கம் பார்க்க]

# "யார் சிபார்சு செய்தாலும் வட்டாரவிஸ்தரிப்புவேண்டும்"

## சங்கானையில் மீண்டும் துப்பாக்கிச்சூட்டுச்சம்பவம்

சங்கானை, புதன் சங்கானையிலுள்ள கடையொன்றில் நேற்றுமுன்தினம் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது எனினும் மேற்படி கடைச் சொந்தக்காரர் தெய்வாதீனமாக மயிரிழையில் உயிர் தப்பினார். இதுசம்பந்தமாக பொலிசார் இருவரைக் கைதுசெய்து விசாரணை நடத்தினர். இதில் உடந்தையாக இருந்தவர் களென்க் கருதப்படும் இன்னும் இருவரைக் கைது செய்வதில் சங்கானைப் பொலிசார் திவிரமுயற்கி எடுத்துள்ளர். சந்தை மைதானத்தில் திரும்பவும் பொலிசார் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளனர். சில தினங்களின் முன்னரும் சங்கானைப் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றதும் மூவர் காயமடைந்து காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## சிங்கள வாலிபராக நடித்த கோண்டாவில் வாசி கைது

யாழ்ப்பாணம், புதன் பொலகாவலையைச் சேர்ந்த சிங்கள வாலிபரைப் போல நடித்துக் கொண்டிருந்த கோண்டாவிலைச் சேர்ந்த தமிழ் வாலிபர் ஒருவர் பொலிசாரிடம் வகையாக மாட்டிக்கொண்டார். இச் சம்பவம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலுள்ள வார்ட் ஒன்றில் நடைபெற்றது.

இங்கு கடமையாற்றும் சிங்களம் தெரியாத காவலாளிகளுடன் சிங்களத்தில் கதைத்துத் தான் ஒரு சிங்களவர் என்றும், பொல்காவலையைச் சேர்ந்தவரென்றும் நடித்த இந்த வாலிபர் 'பாஸ்' இல்லாமல் வார்ட் ஒன்றில் நுழைந்து விட்டாராம். அதுமாத்திரமன்றித் தனது சைக்கிளையும் கூடத் தன்னுடன் வார்ட்டுக்கு எடுத்துச் சென்றாராம். இவரது நடத்தையில சந்தேகம் கொண்ட வார்ட் பணியாளர் ஒருவர் இவரை அழைத்து ஆஸ்பத்திரி பொலிசாரிடம் கொண்டுசென்ற போதே இவரது நடிப்பு அம்பலமானது அங்கிருந்த பொலிசாருடன் இவரால் சிங்களத்தில கதைக்க முடியவில்லை. விசாரணை முடிவில் இவர் கோண்டாவிலைச் சேர்ந்த தமிழ் வாலிபர் எனத் தெரியவந்தது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்று காவலில் வைக்கப்பட்ட இவ்வாலிபர் பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். (நநி)

## முன்னாள் யாழ். மேயர் திரு. துரைராசா கருத்து

### "தேர்தல் நடக்கட்டும் பின்னர் வட்டாரப்பிரிவினை நடக்கட்டும்"

—திரு. துரையப்பா

யாழ்ப்பாணம், வியா. "யாழ்ப்பாண மாநகர சபை வட்டாரங்கள் கட்டாயம் பிரிக்கப்பட வேண்டும். தேர்தலுக்கு முன்பா, அல்லது பின்பா என்பது மந்திரி திருச்செல்வம் தீர்மானிக்கவேண்டியதாகும்".

யாழ்ப்பாணம் மாநகர சபை தேர்தல் சம்பந்தமாக முன்னாள் மேயர் திரு. ரி. எஸ் துரைராஜா மேற்கண்டவாறு நமது நிருபரிடம் நேற்று தெரிவித்தார்.

திரு. துரைராஜா மேலும் கூறியதாவது: மார்ட்டினென்றாலும் சரி, வேறுயாரென்றாலும் சரி எங்களுக்கு அக்கறையில்லை. வட்டாரங்கள் பிரிக்கப்பட வேண்டும். யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு வட்டாரங்களிலும் 5000க்குமேற்பட்டவாக்காளர் இருக்கின்றனர். 20 வருடங்களாக வட்டாரப் பிரி பிரிவினை இங்கு நடைபெற [illegible]ல்லை. கண்டி மாநகரசபையில் ஒவ்வொரு வட்டாரத்திலும் 2000 வாக்காளரும், காலியில் ஒவ்வொரு வட்டாரத்திலும் 1500 வாக்காளர்கள் மட்டுமே இருக்கின்றனர். இந்த நிலைமையில் யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் குறைந்தது 2000 வாக்காளரை கொண்டதாக வட்டாரங்கள் பிரிக்கப்பட வேண்டும். மார்ட்டின் கமிஷன் அறிக்கைபற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது.

அரசியல் காரணங்களுக்காக இப்போது வட்டாரங்கள் பிரிக்கப்படாமலிருந்தால் வரியிறுப்பாளர்களைத் தான் அது பாதிக்கும். ஆதலால் தேர்தலுக்கு முன்போ அல்லது தேர்தல் நடந்த பின்போ உடனடியாக வட்டாரங்கள் பிரிக்கப்பட வேண்டும்.

முன்னாள் மேயரான திரு. அலபிரட் துரையப்பாகூறியதாவது: நாங்கள் நினைத்து எதுவும் நடக்கப் போவதில்லை. 17 வட்டாரங்களுக்கும் தேர்தல் நடத்துவதென மந்திரி தீர்மானித்து விட்டார். ஆதலால் 17 வட்டாரங்களுக்கு மட்டும் தேர்தல் நடந்தேதிரு[illegible] அதன்பின் வட்டார பிரிவினை நடக்கலாம். மாநகர சபைகலைக்கபடுமுன்எத்தனை வட்டாரங்கள் இருந்ததோ, அத்தனை வட்டாரங்களுக்கும் தேர்தல் நடைபெற வேண்டும்.

முன்னாள் அங்கத்தவரான திரு. ஏ. எஸ். நடராசா கூறியதாவது: யாழ்ப்பாணம் மாநகரசபை தேர்தலைப் பற்றி இன்னும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. அதன் பின்புதான் கருத்தை தெரிவி[illegible] வசதியாயிருக்கு[illegible]. தேர்தல் நடப்பது இன்னும் கேள்விக்குறியில்தான் இருக்கிறது. 17 வட்டாரங்களுக்கும் தேர்தல் நடந்தபின்தான் வட்டாரப் பிரிவினை நடைபெறவேண்டும்.

முன்னாள் மேயரான திரு. எஸ். நாகராசாவிடம் யாழ்ப்பாண மாநகாசபை தேர்தலைப்பற்றி கேட்டபோது இதனைப்பற்றி சொல்வதற்கு எதுவுமில்லையென கூறினர்,

மா[illegible]ட்டின்கமிஷன் அறிக்[illegible] வட்டாரங்களை பிரிவினை செய்த பினபே மாநகரசபைத் தேர்தலை

[6-ம் பக்கம் பார்க்க]

## முருங்கனில் ஓர் உப பொலிஸ் நிலையம்?

யாழ்ப்பாணம், வியாழன் முருங்கனில் அடுத்தடுத்து நடைபெற்ற கொலை சம்பந்தமாகவும் 6000 ரூபா கொள்ளை சம்பந்தமாகவும் துப்புதுலக்க கொழும்பிலிருந்து இரகசிய பொலிசார் வரவழைக்கப்பட்டிருக்கின்றனர்.

முருங்கனில் நிரந்தரமான பொலிஸ் நிலையம் இல்லாததால் இக்களவுகள் சம்பந்தமாக பூரண விசாரணை சரியாக நடைபெருததால், இங்கு ஓர் உப பொலிஸ் நிலையம் அமைக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. இக்கொலை சம்பந்தமாக இன்னும் எவரும் கைது செய்யப்படவில்லை.

இதுசம்பந்தமாக மன்னார் உதவி பொலிஸ் சுப்பிரின்டன்ட் திரு. அலெக்ஸ் அபயசேகரா பூரண விசாரணை நடத்தி[illegible].

## யாழ். மாவட்ட பிரச்னைகள்

### திரு. வேர்ணன் அபயசேகரா வெளியிடுவார்

யாழ்ப்பாணம், புதன் யாழ். மாவட்ட விவசாயிகளின் முக்கிய தேவைகள் பற்றியும் அவர்களின் விவசாய உற்பத்திக்கான அத்தியாவசிய பொருட்களின் அவசியம் பற்றியும் அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவிருக்கும் அரசாங்க அதிபர்களின் மகாநாட்டில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அப[illegible] பிரதமர் திரு டட்லி சேனநாயக்கா தலைமையில் அடுத்த மாதம் 16-ம் 17-ம் திகதிகளில் இந்த மகாநாட்டை நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றது. அரசாங்க அதிபர்களின இந்த இரு நாட்கள் நடைபெறும் மகாநாட்டில் உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யூ. தகநாயக்கா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வாராம். [illegible]டைபகுதி பொலிஸ், இராணுவ உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படும் 'லக்சல' விற்பனை நிலையம் ஆகியனபற்றியும் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் ஆலயபிரவேசம் தேநீர்க்கடைப் பிரவேசம் சாதி ஒழிப்பு நடவடிக்கைகள் ஆகியனபற்றியும் இம்மகாநாட்டில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் முக்கியமாகக் குறிப்பிட இருப்பதாகத் தெரிகிறது

(நநி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

உலகம் கடவுளால் ஒழுங்கே அமைக்கப்பட்டுள்ளது. ஆதலால் அதன் நிகழ்ச்சிகளும் ஒழுங்கு உடையதாகவே தான் இருக்கவேண்டும்.

—மார்க்க அரேபியர்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஞு ஆவணி ம 22 உ (7-9-67)

## சாக்ளாவின் ராஜினமா?

மொழிப் பிரச்னையை உள்ளடக்கிய கல்விக் கொள்கையினுல் ஏற்பட்ட கருத்துவேற்றுமைகாரணமாக இந்திய வெளிவிவகார அமைச்சர் பதவியிலிருந்து திரு. எம். ஸி. சாக்ளா ராஜினமாச்செய்திருக்கிறார். இந்த ராஜினமாச் செய்தி இந்தியாவில் மட்டுமல்ல உலக நாடுகளிலும் குறிப்பாக புதிதாக சுதந்திரமடைந்து மொழிப்பிரச்னைக்குட்பட்டுள்ள நாடுகளிலும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளதென்று சொல்லலாம்.

இந்திய கல்வி அமைச்சர், புதிய தேசிய கல்வித்திட்டம் ஒன்றைக்கொண்டுவரவிருக்கிறார். தமது புதிய திட்டத்தைஇந்திய சுதந்திரதினமான ஆகஸ்ட் 15-ந் திகதி வெளியிடவிருப்பதாக அவர் தெரிவித்திருந்தார். ஆயினும் சிலபல காரணங்களுக்காக அன்று அவர் அதை வெளியிடவில்லை; இன்றுவரையும் கூட அவர் அதை வெளியிடவில்லை. ஆனுல் அந்தத் திட்டம் இந்திய மந்திரி சபையில் பரிசீலனை செய்யப்பட்டிருக்கலாமென்றும் மந்திரி சபை அதை ஏற்றுக்கொண்டிருக்கக்கூடுமென்றும் ஊகிக்க இடமுண்டு. புதிய கல்வித் திட்டம் வரும்வரை திரு சாக்ளா பொறுத்திருக்கலாம் என்று ஆச்சார்ய கிருபளானி போன்றோர் இன்று கூறியபோதிலும், புதிய கல்வித்திட்டத்தை நன்கு அறிந்து கொண்டதாலும் அதுபற்றி தமது கருத்து ஏற்றுக் கொள்ளப்படாததாலும் திரு. சாக்ளா வேறு வழியின்றி ராஜினமாச் செய்திருக்கக் கூடும். அரசாங்கத்தில் வேறு எந்த விஷயத்தில் கருத்து வேறுபாடுகள், தவறுகள் இருந்தாலும் திருத்திக் கொள்ளலாம். ஆனுல் கல்விக்கொள்கையில் ஏற்படும் தவறுகளைத் திருத்திக்கொள்ள முடியாதென்றும் அதுலட்சக்கணக்கான மக்களை, ஒரு சந்ததியினரையே பாதிக்கக்கூடியதென்றும் திரு. சாக்ளா தெரிவித்திருப்பது, புதிய கல்வித் திட்டம் கொண்டுவரப்படும்வரை பொறுத்திருந்தால் அதற்குத்தாமும் உடந்தையாக இருந்த குற்றத்துக்குள்ளாக நேரிடும் என்று கருதியதே காரணமாக இருக்கலாம்.

இந்தி மொழி இந்தியாவில் ஆட்சிமொழியாவதை திரு. சாக்ளா எதிர்க்கவில்லை. ஆனுல் அவசரப்பட்டுஇந்தியை ஆட்சிமொழியாக்குவதும், கல்வி நிர்வாக, நீதித்துறைகளில் ஆங்கிலத்தை நீக்கி பிராந்திய மொழிகளுக்கு இடமளிப்பதும் தேசிய ஐக்கியத்துக்கு ஆபத்து விளைக்கு மென்று திரு. சாக்ளா கூறுகிறுர். ஆங்கிலம் தொழில்நுட்ப, விஞ்ஞான அறிவுக்கும், உலகத் தொடர்புக்கும் முக்கியமானதுமட்டுமல்ல இன்று இந்தியாவில்அது இணைப்பு மொழியாகவும் இருக்கிறது. ஆங்கிலத்தின் இடத்தை இந்தி இப்போதைக்கு எடுத்துக்கொள்ளக் கூடிய நிலையிலும் இல்லை. இந்தி ஆட்சிமொழியாவதை தென்னிந்திய ராஜ்யங்கள் கடுமையாக எதிர்க்கின்றன. இந்நிலையில் ஆங்கிலத்தை அகற்றி பிராந்தியமொழிகளுக்கு மட்டும் இடமளித்தால் இந்தியராஜ்யங்களுக்கிடையில் இணைப்பு மொழி இல்லாது போய்விடும். இதன் விளைவு நாட்டின் இணைப்பும் பிணைப்பும் நீங்கி தேசிய ஐக்கியத்துக்கு ஆபத்து ஏற்படும் என்று திரு. சாக்ளா கவலைப்படுவதில் நியாயமிருக்கிறது.

திரு. சாக்ளா பல்லாண்டுகள் கல்வி அமைச்சராக இருந்தவர்; தேசப்பற்றுஉள்ளவர்; அறிஞர். அவருக்குப் பதவி பெரிதல்ல, நாட்டின் ஐக்கியமே பெரிதென்பது அவரது ராஜினமாவிலிருந்து தெளிவாகிறது.

நமது நாட்டிலும் புதிய கல்வித்திட்டம் பற்றி அடிக்கடி பலரும் பேசுகிறுர்கள். நமது கல்வி அமைச்சர், நமது நாட்டுக்கு ஏற்ற கல்வித்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காக வெளிநாடுகள் பலவற்றுக்கும் சென்று வந்தார். இப்போது வடக்கு தெற்கு என்று பேசிவருகிறுர். தேசிய ஐக்கியத்தில் திரு. சாக்ளாவுக்கு உள்ள கவலையும் நமது கல்வி அமைச்சருக்கு உள்ள அக்கறையும் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடியதா?

# இன்று இடம்மாறும் சிங்க குரு சிறப்பைத்தருவாரா?

(ஐயாத்துரை சரவணபவன்)

எல்லோருக்கும் இன்பத்தை அளிக்கவல்ல குருபகவான் பிலவங்க வருடம் ஆவணி மாதம் 21-ந் திகதி [7-9-1967] உச்ச இராசியாகிய கர்க்கடகத்தை விட்டுச் சிங்கத்துக்குச் சென்று கொண்டிருக்கிறார். சிங்கம் பன்னிரண்டு இராசிகளிலும் தலைமைவாய்ந்தது. அவ்விராசிக்குரியவர் சூரியன். அவர் அதில் ஆட்சியாக இருந்துகொண்டுவியாழனை வரவேற்கின்றார். கிரகதத்துவ ரீதியில் சூரியன் சிவனுகவும் வியாழன் விநாயகராவும் கருதப்படுபவர். தந்தை வீட்டுக்கு வரும் தனயனைத் தந்தையாகிய சூரியனே இருந்து வரவேற்பது சிறப்பானதாகும். சிங்க இராசியில் குரு ஒருவரே நட்பாக இருந்து செல்பவர். ஆகவே சூரியனது நட்புக்கிரகமாக அவர் அமைகிறார். அவர் ஒரு வருடகாலம் சிங்கத்திற் சஞ்சரிப்பார். அக்காலத்தில் உலக அரசியலில் பெரும் கொந்தளிப்புகளைக் கொடுப்பார். அவர் யுத்தகாரகன் செவ்வாயையோ அல்லது ஆயுத உற்பத்தியாளன் சனியையோ தனது பார்வையாற் கவரவில்லை. நல்லவர்கள் பார்வை கிடைக்கப் பெருத தீயவர்கள் செய்யும் தீமைபெரிதாகும். சனியும் இராகுவும் மீனத்திற்சஞ்சரிப்பர். 6-2-1968ல் செவ்வாயும் மீனத்தைச் சென்றடைவார் 16-3-1968 வரை வியாழனுக்கு எட்டில் இருந்து கொண்டு சூரியன் சனி செவ்வாய் இராகு என்ற நால்வரும் போடுகின்ற இரகசியத்திட்டங்கள் உலக அமைதியைக் குறைக்கும். சமாதானத் தூதுவர்கள் கூறும் நல்லிணக்கத்தை மற்ற நாடுகள் ஏற்றுக்கொள்ளத்தயங்கும். 16-3-1968 ன் மேல் உலக அமைதி கூடும்.

### கோசர பலன்

கோசர பலன்படி வியாழன் சந்திர இராசிக்கு 5 ல் அல்லது 9 ல் வரும்போது தான் நன்மையைச் செய்வார். 2-ல், 4-ல், 7-ல், 11-ல் வரில் மத்திமமானபலனையே செய்கின்றார் 1-ல், 3-ல், 6-ல், 8-ல், 10-ல் 12-ல்வரும்போது மிகவும் தீமையான பலனையே செய்துவிடுகின்றார்.

### மேடம்

புத்திரச் சிறப்பு, பணப் பெருக்கம், உத்தியோகம் கிடைத்தல், உத்தியோக உயர்ச்சிகள் கிடைத்தல், வாகனலாபம், விவாகங் கைகூடுதல், வியாபாரிகளுக்குத் திடீர்ப் பண வரவு, விவசாயிகளுக்குப் பயிர்ச் செழிப்பு.

### இடபம்

வாகனச் சிறப்பு, புதுக் காணி பூமி சேருதல், கடைகள் கட்டிடங்கள் கட்டல், உத்தியோகத்தர்களுக்கு நல்ல இடங்களுக்கு இடமாற்றம், குடும்பசுகம், வியாபாரிகளுக்குப் பொருள் வரவு. விவசாயிகளுக்கு அரசாங்க உதவிகள் கிடைத்தல்.

### மிதுனம்

மன அமைதிக் குறைவு. சகோதரங்கள் பகையாதல், சுற்றத்தவர்களுடன் வழக்கு சண்டை, தேக பெலயீனம், உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்ச்சித் தடைகள், வியாபாரிகளுக்கு மூலதனங் குறைதல், விவசாயிகளுக்கு நட்டம்.

### கர்க்கடகம்

களஸ்திர புத்திர மகிழ்ச்சி, இனசனக்கூட்டம், பொருள் வரவு, உத்தியோகத்தர்கள் வீடுவாசற் சிறப்பு, ஆபரணங்கள் சேருதல், வியாபாரிகளுக்குப் பொருள் வரவு, விவசாயிகளுக்கு நன்மைகள் உண்டு.

### சிங்கம்

அமைதிக் குறைவு. அலைச்சல், தேகமெலிவு, பொருட்செலவு, உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம், வியாபாரிகளுக்கு நட்டம், விவசாயிகளுக்குப் பொருட்செலவு.

### கன்னி

பொருட்செலவு, நித்திரைக் குழப்பம், கண்களிலே ரோகம், வாத ரோகம், உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம். வியாபாரிகளுக்கு பொருட்செலவு. விவசாயிகளுக்குப் பொருட்செலவு.

### துலாம்

இலாபம், மகிழ்ச்சி, பொருள்வரவு, செய்தொழில்மேன்மை, வீடு வாசற் சிறப்பு, உத்தியோகத்தர்களுக்கு நல்ல இடங்களுக்கு மாற்றம், வியாபாரிகளுக்கு அதிக லாபம், விவசாயிகள் நன்மையடைதல்.

### விருட்சிகம்

அமைதிக் குறைவு, இடமாற்றம், தொழில் மத்திம நன்மையடைதல், உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம். வியாபாரத்தில் சமபலிதம், விவசாயிகளுக்கு மத்திம நன்மை.

### தனு

இராசபோக நடையுடை அலங்காரம், அரசாங்கத்தினுலும் சன்மானங்கள் பட்டங்கள் பதவிகள் பெறுதல், வாகனங்கள் சேருதல், உத்தியோகத்தர்களுக்குப் பதவி உயர்வுகள், வியாபாரிகள் உன்னதமான முறையில் முன்னேறுதல். பணப் பெருக்கம்.

### மகரம்

தேகபெலயீனம், வைத்தியச் செலவு, பொருட்செலவு, சச்சரவுகள், உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம், அலைச்சல். வியாபாரிகளுக்கும், விவசாயிகளுக்கும் பொருள் நட்டம்.

### கும்பம்

தேகசுகம், இல்லச் சிறப்பு, பெரியோர் அனுக்கிரகம். பொருள்வரவு. உத்தியோக உயர்ச்சி, வியாபாரிகளுக்குப் பொருள்வரவு, விவசாயிகளுக்கு நன்மை.

### மீனம்

நோய் பிணி, சத்துராதிகளினுல் தொந்தரவுகள், வழக்கு, வியாச்சியங்கள். உத்தியோகத்தர்களுக்கு கடன் தொந்தரவுகள், இடமாற்றம், வியாபாரிகளுக்குப் பொருட்செலவு, விவசாயிகளுக்குபொருட்செலவு நட்டங்கள் உண்டாம்.

## இன்றைய பலன்

7-9-67
வியாழக்கிழமை
(ஆவணி மாதம் 22உ)

நட்சத்திரம் - அத்தம் காலை 6-50 வரை. மேல் சித்திரை.

திதி- திருதியை பகல் 11-38 வரை. மேல் சதுர்த்தி.

சுபநேரம்- 7-34 - 9-04
ராகுகாலம்- 1-34-3-04

மேடம் - ஊக்கமின்மை உயர்வில் தாமதம்

ரிஷபம்- நல்லெண்ணம் நலிவும் நீங்கும்.

மிதுனம்- பயணத்துக்கு ஏற்பாடு, முயற்சி பலிதம்.

கடகம்- வரவில்திருப்தி வாழ்க்கைச் சுகம்.

சிங்கம்-எதிர்பாராத விளைவு, ஏமாற்றம்.

கன்னி- தனக்குறைவு, துணிவழி நாட்டம்.

துலாம்- வாக்குப் பலிதம், வரவு நன்று.

விருச்சிகம்- அன்னிய நாட்டம், அலைச்சல் மிகுதி.

தனுசு- விடா முயற்சி, பூமிலாபம்.

மகரம்-பாக்கியவிருத்தி பகைவர் பணிவர்.

கும்பம்-பகைமைசீறும், சிக்கலைத் தவிர்.

மீனம்- நண்பர் உதவி, நல்லவை நடக்கும்.

## நெடுந்தீவில் உப பொலிஸ் நிலையம்

யாழ்ப்பாணம், வியாழன்

நெடுந்தீவில் ஓர் உப பொலிஸ் நிலையம் அமைக்கப்படவிருக்கின்றது. யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஒரு சார்ஜண்ட் தலைமையில் மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இங்கு கடமையாற்றுவார்கள்.

கடந்த மாதம் இங்கு நடைபெற்ற ஒரு கொலை சம்பந்தமாக இன்னும் எவரும் கைதுசெய்யப்படாததாலும் இங்கு தொடர்ந்து பல குற்றச் செயல்களும் நடந்து வருவதாலுமே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

[ந. நி]

## நாட்டிலும் நகரிலும்

நல்லூர் திருவிழா நடந்துமுடிந்துவிட்டது. ஆகையினுல் நேயர்கள் சிலருடைய முறைப்பாடுகளை இனிமேல் இங்கே வெளியிடலாம.

ஆண்டுதோறும் தேர், தீர்த்தத் திருவிழாவுக்கு வீதிப்பிரதட்டை செய்து வழிபாடு செலுத்தும் திருநெல்வேலி வடக்கைச்சேர்ந்த கா. சி. நடராசா என்பவர் வழமைபோல தீர்த்தோற்சவத்துக்கும் போயிருந்தாராம். தீர்த்த மண்டபத்துக்குள் முருகன் முதலிய உற்சவ மூர்த்திகள் உள்ளே பிரவேசித்தவுடன் ஜனங்கள் நெருக்கியடித்துக்கொண்டு உள்ளே புகுந்தார்கள். இந்த அன்பரும் தீர்த்த மண்டபத்துக்குள் நுழைய முயன்றுராம். அச்சமயம் தொண்டர்படையைச் சேர்ந்த சிலர் வந்து கிழக்குப் பக்கத்திலுள்ள படலையைச் சாத்திவிட்டார்களாம்.

ஜனநெருக்கடி வரவர அதிகரிக்கிறது. இவ்வருடமும் ஏராளமான ஜனங்கள். வேறும் பலர் வந்து தீர்த்த மண்டபத்துக்குள் நுழைய முயற்சித்தார்கள். காவல்செய்த தொண்டர்கள் சிலர் மேற்படி அன்பர் உட்பட பலரைக் காலால் உதைத்தும் வெளியேற்றினுர்களாம்.

இந்த அநாவசியமான தாக்குதலால் இரண்டொரு பெண்களும் கீழே விழுந்து தவித்தார்களென்று இந்த அன்பர் தெரிவிக்கிறுர்.

கோயில் திருவிழாக்களில் இந்தவிதமான சங்கடங்கள் எங்கும் நடப்பதுண்டு.

சமீபத்தில் திருப்பதி வெங்கடேஸ்வரன் ஆலயத்தில் ஜனக்கூட்டம் மிகுதியினுல் பலர் நசுங்கிக் கொலையுண்டார்கள்.

கோயில் திருவிழாக்களில் இப்படியான சங்கடங்கள் நேராமல்தடுக்கவேண்டியது கோயில் முகாமையாளர்களின் கடமை மட்டுமன்று. இக்காலங்களில் தொண்டர்களாகக் கடமை செய்பவர்களும் மிகவும ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும்.

ஜனக்கூட்டம் ஆர்வம் மிகுதியினுல் கட்டுக்கடங்காமல் குமுறி எழுந்துவரும்போது எந்தவிதமான சாத்விக மனம் படைத்தவர்களும் நிலை தவறிவிடக் கூடும்.

அதே சமயம் பொதுமக்களும் இந்தவிதமான சந்தர்ப்பங்களில் கொஞ்சம் பணிவுடனும் அனுதாபத்துடனும் நடந்துகொள்ளவேண்டியது அவசியம்.

நல்லூரில் கந்தசுவாமியார் தீர்த்தமாடும்போது அந்த அற்புதக் காட்சியைப் பார்ப்பதற்கு மணிக்கணக்காக மக்கள் காத்திருப்பார்கள். பிந்தி வருபவர்கள் தாங்களும் இந்தக் காட்சியை ஒருமுறை தரிசித்துப் போகலாமே என்று இடித்து முட்டிக்கொண்டு உள்ளே நுழைய முயற்சிப்பது சகஜம்.

இனிமேல் வரும் திருவிழாக்களில் இப்படியான நெருக்கடிகள் ஏற்படாதபடி தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது அவசியம்.

தீர்த்த மண்டபத்துக்குள் இந்நேரத்திற்குப் பிறகு ஜனங்கள் பிரவேசிக்கலாகாதென்று விளம்பரங்கள் மூலமாகவும், ஒலிபெருக்கி, அறிவித்தல் மூலமாகவும் முன்கூட்டியே அறிவித்தல் கொடுத்துவிட்டால் வீண் மனக்கசப்புகள் உண்டாகாது.

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சாக்ளாவின் ராஜினமாவை ராஷ்டிரபதி ஏற்ருர்

## 'வருந்தத்தக்க முடிவு' என்கிருர் பிரதமர் இந்திரா

புதுடில்லி, செப். 6

இந்தியவெளியுறவு மந்திரி திரு. சாக்ளாவின் ராஜினமாவை இந்திய ராஷ்டிரபதி ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஆங்கிலத்துக்குப் பதிலாக பிராந்திய மொழிகளைப் பாவிப்பதென்ற மத்திய அரசாங்கத்தின் முடிவை ஆட்சேபித்து, திரு. சாக்ளா தமது ராஜினமாவைச்சமர்ப்பித்திருந்தார். இந்த முடிவு நாட்டின் ஒற்றுமையைக் குலைக்குமெனத் தாம் கருதுவதாகத் திரு சாக்ளா தமது ராஜினமாக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

### பிரதமர் வருத்தம்

திரு. சாக்ளாவின் ராஜினமாவை 'மிகுந்த வருத்தத்துடன்' ஏற்றுக்கொண்ட இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி, அவருடைய ஊகங்கள் சரியானவையல்ல என்று கூறினர். நாட்டின் ஒற்றுமை குலையும் என்ற அவரது கருத்தும் சரியானதல்ல எனப் பிரதமர் குறிப்பிட்டார். வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே அரசாங்கத்தின் இலட்சியம் ஆகும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

ராஜினமாவைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர், திரு. சாக்ளா தம்முடனும் மற்றும் மந்திரி காக்களுடனும் அதுபற்றி கலந்தாலோசித்திருக்கலாமென்றும் பிரதமர் கூறினர். ஆனாலும், அவரது மாற்றமுடியாத முடிவைத் தாம் ஏற்றுக்கொண்டு, அதனை ஏற்கும்படி ராஷ்டிரபதியிடம் சிபார்சு செய்வதைத் தவிரத் தமக்குவேறு வழியில்லை எனவும் பிரதமர் தெரிவித்தார்.

வெளியுறவு இலாகாவின் பொறுப்பைப் பிரதமர் இந்திரா காந்தியே தற்காலிகமாகப் பொறுப்பேற்றுள்ளார்.

திரு. சாக்ளா தமது 'மதிப்பும்விவேகமும் வாய்ந்த ஒரு சகா' எனப் பிரதமர் வர்ணித்தார். 'கஷ்டமான காலத்திலும் தமது கடமையைச் சரிவரச் செய்தவர் அவர்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

திரு. சாக்ளாவின் ராஜினமாக் கடிதம் 'சட்ட நுணுக்கங்கள் நிறைந்து' விளங்குவதாக சுதந்திரக் கட்சித்தலைவர் திரு. ராஜகோபாலாச்சாரியார் குறிப்பிட்டுள்ளார். அவர் திரு. சாக்ளாவின் ராஜினமா முடிவைப் பாராட்டினர்.

### பிற தலைவர்கள் கருத்து

மொழிப் பிரச்னை பற்றிய தீர்க்கமான முடிவு எதுவும் இதுவரை எடுக்கப்படாதிருக்கும் பட்சத்தில், திரு. சாக்ளாவின் ராஜினமா அவசரப்பட்டுச் செய்யப்பட்ட காரியமாகத் தமக்குத் தோன்றுவதாகக் கேரள கல்வி மந்திரி திரு. முகம்மது கோயா கருத்து வெளியிட்டுள்ளார்.

ஹைதராபாத்தில் பத்திரிகையாளரிடம் பேசுகையில், திரு. சாக்ளாவின் ராஜினமா தமக்கு வியப்பை அளித்துள்ளதாக மத்திய கல்வி மந்திரி திரு. திருகுண சென் கூறியுள்ளார்.

திரு. சாக்ளா, உரியநேரத்துக்கு முன்னர் ராஜினமாச் செய்துவிட்டாரெனத் தாம் கருதுவதாகத் திரு. ஆச்சாரிய கிருபளானி குறிப்பிட்டுள்ளார்.

---

# உள் மொங்கோலியாவில் சீன எதிர்ப்பு இயக்கம்

## காண்டனில் நடந்த மோதலில் நூற்றுக்கணக்காஞேர் மரணம்

பீகிங், செப். 6

உள் மொங்கோலியாவில் சீன அரசாங்கத்துக்கும், சீனத் தலைவர் திரு. மா-சே-துங்குக்கும் எதிரான இயக்கத்தைத் தலைமை வகித்து நடாத்துபவர் திரு. உஞன்சு என்பவரெனப் பீகிங் ரேடியோ இங்கு அறிவித்துள்ளது.

இன வேற்றுமையைக் கிளப்புவதன்மூலம் உஞன்சு மொங்கோலியமக்களைச் சீன அரசாங்கத்துக்கு எதிராகத் தூண்டி விடுவதாகச்சீன அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

### கட்டுமீறி விட்டது

உள் மொங்கோலியாவில் சீன எதிர்ப்பு இயக்கம் கட்டுக்கடங்காமல் போய்விட்டதென்பதையே உஞன்சு மீதான ரேடியோத் தாக்குதல் காட்டுவதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

### காண்டனில்

இதற்கிடையில், தெற்குச் சீனுவின்மிகப்பெரியநகரான காண்டனில், கடந்த மூன்று நாட்களாகச் செங்கொடிப் புரட்சிவாதிகளுக்கும் செங்காவலருக்குமிடையே நடைபெற்ற சண்டையில் பலர் காயமுற்றனர்.

மற்றுமொரு பகுதியில், விவசாயிகளுக்கும் துருப்பினருக்குமிடையே நடைபெற்ற மோதல்களில் நூற்றுக்கணக்காஞேர் இறந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. ஈற்றில் விவசாயிகள் துருப்பினரின் ஆயுதங்களைக் களைந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

### இருட்டியபிறகு . . .

இருட்டிய பிறகு காண்டன் ஆளில்லா நகரமாக மாறிவிடுவதாக அங்கிருந்து வந்த பிரயாணிகளைச் சுட்டிக்காட்டி ஹொங்கொங் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. தினமும் தெருக்களில் கொலையும், கொள்ளையும் நடைபெறுவதாகவும், இதனுல் மக்கள் இருட்டிய பிறகு தமது வீடுகளை விட்டுவெளியேசெல்ல அஞ்சுவதாகவும் அப்பிரயாணிகள் தெரிவித்ததாக அப்பத்திரிகைகள் மேலும் குறிப்பிட்டன.

காண்டனுக்கும் ஹொங்கொங்குக்கு மிடையேயுள்ள இரண்டு முக்கிய ரயில் பாதைகள் மா சே துங் எதிர்ப்பாளர் கைகளிலுள்ளதாகக் கடைசியாக வந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

---

# சூயஸ் கால்வாய் பகுதியில் நேற்று மீண்டும் சண்டை

## இஸ்ரேல் - ஐ. அ. கு. - ஜோர்தான் துருப்புகள் மோதிக்கொண்டன

### திங்கள் போரில் 42 பேர் கொலை

கெயிரோ, செப். 6

சூயஸ் கால்வாய் பகுதியில் இஸ்ரேல் துருப்புகளுக்கும், ஐ. அ. கு, ஜோர்தான் துருப்புகளுக்கு மிடையே மீண்டும் சண்டை ஏற்பட்டுள்ளது. இச் சண்டை நேற்றுச் சுமார் அரை மணி நேரத்துக்கு நீடித்தது.

இம் மோதலில், ஐ. அ. கு. துருப்பினருக்கு எவ்வித ஆட்சேதமும் ஏற்படவில்லை என ஐ. அ. கு. அறிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற சண்டையில அல்ஜீரியத் துருப்புகளும் கலந்து கொண்டதாகக் கெயிரோவிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இஸ்ரேலின் மூன்று தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டதாகவும் அவை அறிவிக்கின்றன.

#### ஜோர்தானுடன் மோதல்

தாய்மாய் பாலத்துக்கருகே, இஸ்ரேல் துருப்புகள், ஜோர்தான் துருப்புகளுடன் மோதிக் கொண்டன. மூன்று ஜோர்தானியரும், இரண்டு இஸ்ரேலியரும் காயமுற்றதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இச் சண்டையில்டாங்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள் முதலியன பாவிக்கப்பட்டன.

#### சிவிலியன்கள் கொல்லப்பட்டன

இதற்கிடையில், திங்கட்கிழமை நடைபெற்ற சண்டையில், இஸ்ரேலிய துருப்புகள் மக்கள் வசிக்கும் பகுதிகளில் தாக்கியதாகவும், இதன் விளைவாக 42 பேர் கொல்லப்பட்டதாகவும், 161 பேர் காயத்துக்குள்ளாகியதாகவும் கெயிரோ வட்டாரங்கள் கூறுகின்றன. 30 வீடுகளும் நாசமாக்கப்பட்டன.

#### விசாரணை

இந்தத் தாக்குதலையிட்டு சூயஸ் பகுதியிலுள்ள ஐ. நா. பார்வையாளர்களில் ஒருவர் உட்பட, ஒரு கமிஷன் விசாரணை நடாத்தத் தொடங்கியுள்ளது.

---

## சீன பற்றி சிக்கிம் மன்னர்

திருவனந்தபுரம், செப் 6

திருவனந்தபுரத்திலிருந்து கொச்சினுக்குச்செல்ல முன்னர், விமான நிலயத்தில் பத்திரிகையாளருடன் பேசுகையில், சீன ஆபத்துப் பற்றிச் சிக்கிம் மன்னர் குறிப்பிட்டார்.

சீன ஆயுதங்களில் அணு ஆயுதமும் சேர்க்கப்பட்டுள்ளதையிட்டு அவர் கவலை தெரிவித்தார்.

சீனுவுடனன சிக்கிம் எல்லைப் பகுதியைப் பாரத இராணுவம்நன்கு பாதுகாப்பதால், சீன ஊடுருவல் என்ற பிரச்னை கிடையாதென்றும் சிக்கிம் மன்னர் கூறினர்.

---

## 11 பேருக்கு கல்தா

### உகாண்டா ஆளும் கட்சியிலிருந்து

கம்பாலா [உகாண்டா], செப். 6

உகாண்டாவின் ஆளும் கட்சி, 11 முக்கிய அங்கத்தவர்களைக் கட்சியினின்றும் நீக்கியுள்ளது.

ஆளும் கட்சியான உகாண்டா மக்கள் கட்சியின் நலனுக்கெதிராகச் சதி செய்த குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் 11 பேரும் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இந்த 11 பேரில், 5 பேர் முனனுள் மந்திரிகளாவர்.

---

## ஸாம்பிய—ரொடீஷிய எல்லையில் படை

லுசாக்கா, செப். 6

ரொடீஷியாவுடனன தனது எல்லைகளில், ஸாம்பியா எல்லைப் பாதுகாப்புப் படையினரை அனுப்பி வைத்துள்ளது. அப் படையினர் ரோந்து சுற்றுவதில் ஈடுபட்டுவருகின்றனர்.

ரொடீஷிய எல்லையின் அந்தப் பக்கத்தில் அதிக இராணுவநடவடிக்கைகள் நடைபெறுவதை முன்னிட்டு, இந்த ரோந்து சுற்றுதலை முன்னெச்சரிக்கையாகஎடுத்துள்ளதாக ஸாம்பியா அறிவித்துள்ளது.

இதற்கிடையில், ரொடீஷியாவில் நேற்று ஆபிரிக்கத் தேசிய வாதிகளுக்கும் பாதுகாப்புப்படையினருக்குமிடையே மோதல் ஏற்பட்டது.

---

## சினுயில் இஸ்ரேல் எண்ணை எடுக்கிறது

டெல்அவிவ், செப். 6

சினுய் வனந்தரத்தில் இஸ்ரேல் கைப்பற்றியுள்ள பகுதியில் இஸ்ரேல் எண்ணை [பம்ப்] செய்ய ஆரம்பித்துள்ளதென்ற செய்தியை இஸ்ரேல்வெளியுறவு மந்திரி திரு. எபான் ஊர்ஜிதம் செய்துள்ளார்.

வருடத்துக்கு 500 லட்சம் கலன் எண்ணை கிடைக்கும் சினுய் பகுதியில் கடந்த சில வாரங்களாகவே இஸ்ரேல் எண்ணை [பம்ப்] செய்வதாகத் தெரிகிறது.

'கைப்பற்றப்பட்ட பகுதிகள் சம்பந்தமாகவுள்ள சர்வதேசச் சட்டங்களின் பிரகாரமாகவே இஸ்ரேல் எண்ணெய் எடுக்கின்றது' எனத் திரு. எபான் கூறியுள்ளார்.

---

## ரஷ்ய—ஐ. அ. கு. வெளியுறவு மந்திரிகள்

மாஸ்கோ, செப். 6

ரஷ்யாவுக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய அரபுக் குடியரசு வெளியுறவுமந்திரி திரு. முகம்மது ரியாத், ரஷ்ய வெளியுறவு மந்திரியுடன் மேற்கு ஆசியா பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

---

# டாக்டர் ராதாகிருஷ்ணன் நினைவு முத்திரை

## சென்னையில் வெளியிடப்பட்டது

சென்னை, செப். 6

முன்னுள் இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனின் 79-வது பிறந்த தினத்தை முன்னிட்டு, அவரது நினைவு முத்திரை நேற்றுச் சென்னையில் வெளியிடப்பட்டது.

டாக்டர் ராதாகிருஷ்ணனின் பிறந்த தின பாராட்டு விழா ஒன்றில் கலந்து கொண்ட தமிழக கவர்னர் திரு. உஜ்ஜல் சிங், ராதாகிருஷ்ணன் நினைவு முத்திரையை வெளியிட்டார்.

### கவர்னர் பாராட்டு

ஆசிரியராகத் தமதுவாழ்க்கையை ஆரம்பித்த டாக்டர் ராதாகிருஷ்ணன், பின்னர் உலகுக்கே ஆசானுக விளங்கினுரென கவர்னர், தமது உரையில் டாக்டர் ராதாகிருஷ்ணனைப் பாராட்டினர். "அவரது பிறந்த தினம், நாடெங்கும் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப் படுவது சாலப் பொருந்தும்" என்ருர் கவர்னர் உஜ்ஜல் சிங்.

### அண்ணு

தமிழக முதல் மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை பேசுகையில், ஞானத்துக்கும், அரசியல் விவேகத்துக்கும் எடுத்துக் காட்டாக டாக்டர் ராதாகிருஷ்ணன் விளங்குவதாகக் கூறினர். 'எந்த அநீதியையும் எதிர்க்க அவர் தயங்க மாட்டார்' என்றும் திரு. அண்ணுதுரை குறிப்பிட்டார்.

---

# தென் அரபிய சமஷ்டிக்கு விரைவில் சுதந்திரம்

## தேசிய ஸ்தாபனங்களுக்கு பிரிட்டன் அழைப்பு

லண்டன், செப். 6

தென்அரபிய சமஷ்டிக்கு விரைவில் சுதந்திரம் அளிப்பதற்கும், அங்கு ஒரு புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கும் பேச்சுவார்த்தைகளை உடனடியாக நடாத்துவதற்கு, அங்குள்ளதேசிய ஸ்தாபனங்களுக்கு பிரிட்டன் அழைப்பு விடுத்துள்ளது.

ஏடனிலுள்ள பிரிட்டிஷ் கவர்னர் சேர் ஹம்ப்ரி டிரெவில்யன், தென் அராபிய சமஷ்டியில் தற்போது பதவியிலுள்ள அரசாங்கம் தோல்வியடைந்துவிட்டதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்தே, பிரிட்டிஷ் அரசாங்கம் தென் அரபிய தேசிய ஸ்தாபனங்களுக்கு இந்த அழைப்பை விடுத்துள்ளது.

### முன்னதாகவே சுதந்திரம்

சுதந்திரத்தை முன்னர் குறிப்பிட்ட திகதிக்குமுன்னதாக அளிப்பதற்கும், தென் அரபிய சமஷ்டியிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகளை வெளியேற்றுவதற்கும் திட்டங்கள் தயாரிக்குமுகமாக, இந்தப் புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கென பிரிட்டன் இத் தேசிய ஸ்தாபனங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### விடுதலை முன்னணி நிபந்தனை

இந்த அழைப்புப் பற்றிக் குறிப்பிட்ட தேசிய விடுதலை முன்னணிப் பேச்சாளர் ஒருவர், பேச்சுவார்த்தைகள்

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "உணவு உற்பத்தியில் சனசமூக நிலையங்கள் ஈடுபட வேண்டும்"

காங்கேசன்துறை, புதன்
'உப உணவு உற்பத்தியில் சனசமூக நிலையங்கள் இயன்றளவு ஈடுபட வேண்டும். இந்த உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுத்தரவும் சனசமூக நிலையங்கள் தம்மாலான உதவியைச் செய்யலாம்.'

இவ்வாறு கணேச சனசமூக நிலையத்தின் பதினொருவது வருடாந்தக் கூட்டத்தில் உரைநிகழ்த்திய வலிகாமம் வடக்குக் காரியாதிகாரி திரு. பி. எஸ். பற்றிக் கூறினார்.

ஒரு கிராமத்தின் முன்னேற்றத்திற்கு சனசமூக நிலையங்கள் பெரிதும் உதவ முடியும் என்றும், பன்னாலைக் கிராமம் முன்னேறுவதற்கு கணேச சனசமூக நிலையம் ஆற்றியபணி பாராட்டுதற்குரியது. என்றும் அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு திரு. வே. கந்தையா தலைமை தாங்கினார். வலிகாமம் வடக்கு உடற்பயிற்சி போதனாசிரியர் திரு. கே. கந்தசாமி சங்கச் செயலாளர் திரு. சி. சிவபாலசுப்பிரமணியம், யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜ செயலாளர் திரு. த. துரைசிங்கம் ஆகியோரும் பேசினர். அராலி

## 'காணி வாங்குவதை தடுக்கமுடியாது'

கொழும்பு, புதன்
இந்தியர்-பாகிஸ்தானியர் சட்டத்தின்கீழ் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவுசெய்யப்பட்டவர்களோ, இருநாட்டுப் பிரஜைகளுமாகாமல் நாடற்றவர்களாக இருப்பவர்களோ இலங்கையில் காணி வாங்குவதையும், காணிகளைத் தமது பெயரில் பதிவுசெய்வதையோ] தாம் தடுக்கமுடியாதென்று உள்நாட்டு அமைச்சர் திரு. டபிள்யு. தகநாயகா நேற்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தார்.

திவுலுப்பிட்டியா எம். பி. திரு. லக்ஸ்மன் ஜயக்கொடியின் கேள்வியொன்றுப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் தகநாயகா மேற்கண்டவாறு கூறினார்.

காணிவாங்குவதைத் தாம் தடுக்கமுடியாதென்று கூறிய அமைச்சர் ஆனால் அதில் வரி அறவிடமுடியுமென்றும் சொன்னார்.

## உபகாரம் செய்யப்போய்...
## அரிசி தியாகம் செய்ததற்காக வரியும கட்டவேண்டுமாம்

யாழ்ப்பாணம், வியாழன்
அரசாங்கத்தின் அரிசித் தட்டுப்பாட்டை நீக்கி அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதற்காக தமது அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களை நன்கொடையாக வழங்கியவர்கள் தற்போது வருமானவரி இலாகாவின் கெடுபிடிக்கு ஆளாகியுள்ளார்கள். இதனால் இவர்கள் இப்போது தம்மை உறுதிப்படுத்த காரியாதிகாரி அலுவலகங்களை நாடத் தொடங்கியுள்ளார்கள்.

அரசாங்கத்தின் நலன் கருதி அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களை வழங்கியவர்களை மாதம் 1000 ரூபாவுக்கு மேல் வருமானம் உள்ளவர்கள் எனக்கருதி வருமானவரி இலாகாவினர் இவர்களிடம் வரி அறவிடவிண்ணப்பம் கோரியுள்ளார்கள். 1000 ரூபாவிற்குமேல் மாதாந்த வருமானம் உள்ளவர்கள் கட்டாயத்தின் பேரில் அரசாங்கத்திற்குத் தமது அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களை வழங்கியதாலேயே நன்கொடையாக வழங்கியவர்களும் இந்த நிலைக்கு ஆளாகியுள்ளார்கள் எனத் தெரிகிறது.

இதனால் அரசாங்கத்திற்கு நன்கொடையாக அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களை வழங்கியவர்கள், வருமானவரி இலாகாவிடமிருந்து தம்மைப் பாதுகாக்க, தமது பிரிவிலுள்ள காரியாதிகாரிகளிடமிருந்து உறுதிப் பத்திரம் பெற்று வருமானவரி இலாகாவினரிடம் சமர்ப்பிக்க வேண்டியுள்ளார்கள்.

(ந.நி.)

### சனசமூக நிலைய கூட்டம்

அராலி, புதன்
அராலி தெற்கு சனசமூக சங்கத்தின் 17-வது ஆண்டுப் பொதுக்கூட்டம் திரு. வி. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தலைவர் தமது உரையில் சமூக நலன் கருதி வாலிபர்கள் சிரமதான வேலையில் பெருமளவு பங்கு கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

திரு. வி. மூர்த்தி பேசுகையில் சனசமூக நிலையங்கள் வாசகசாலைப் பகுதியோடு மட்டும் நில்லாது சிறந்த நூல் நிலையங்களையும் அமைத்து வளருஞ் சமுதாயம் அறிவை வளர்க்க வாய்பளிக்க வேண்டுமென்றார்.

திரு. வீ. கணேசன் பேசுகையில் சனசமூக நிலையங்களில் பெண்களும் பங்கு கொண்டு புத்தகங்கள், சஞ்சிகைகள் வாசிக்க வசதிகள் செய்வது அவசியமென்றார்.

திரு. மா. தயாபரனும் பேசினர். புதியஆண்டு நிர்வாக உறுப்பினராக திரு. வி. நாகலிங்கம் தலைவராகவும், திரு. சு. பொன்னம்பலம் உபதலைவராகவும், திரு. வே. வி. மூர்த்தி காரியதரிசியாகவும், திரு. ந. குலசிங்கம் தனாதிகாரியாகவும், மற்றும் பத்துப்பேர் நிர்வாக சபை உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## தென் அரபிய...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

நடப்பதற்கு முன்னர், ஏடனிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் அனைத்தும் வாபஸ் பெறப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், பெய்ரூட்டில், தென் அரபிய சமஷ்டி மீதான ஐ. நா. கமிஷனுடன், பிரிட்டிஷ் விசேஷ பிரதிநிதி சாக்கில்டன் பிரபு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளார்.

## பதுக்கலுக்கு அதிக தண்டனை

புதுடில்லி, செப். 6
பொருட்களைப் பதுக்கல் செய்தல், அதிக விலைக்கு விற்றல் ஆகிய குற்றங்களுக்கான தண்டனையை இந்திய அரசாங்கம் மூன்றிலிருந்து ஐந்து வருடங்களுக்கு உயர்த்தியுள்ளது.

இக்குற்றங்களைச் செய்யும் பழக்கத்திலுள்ள வியாபாரிகள், குறிப்பிட்ட பொருளை விற்பதற்குத் தடை விதிக்கப்படுவார்கள்.

இவர்கள்எந்தப் பொருளையுமே விற்கத் தடைவிதிக்கப்படவேண்டுமென முன்னர். உத்தேசிக்கப்பட்ட ஆலோசனை, சில சட்டச்சிக்கல்களை முன்னிட்டுக்கைவிடப்பட்டது.

## உலகின் பொருளாதார வளர்ச்சி குறைவு

நியூயோர்க், செப். 6
உலகின் பொருளாதார வளர்ச்சி குறைந்துள்ளதாகச் சர்வதேச நாணய சங்கம் அறிவித்துள்ளது.

## தான்ஸானியா - ஸாம்பியா 1000 மைல் நீளரயில் பாதை
## சீனு அமைத்துக் கொடுக்கும்

பீகிங், செப். 6
தான்ஸானியாவுக்கும் ஸாம்பியாவுக்குமிடையே 1000 மைல் நீளமான ரயில் இணைப்புப் பாதைஒன்றை அமைப்பது பற்றி, தான்ஸானியா, சாம்பியா, சீனு ஆகிய நாடுகளுக்கிடையே ஓர் ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

இந்த ரயில் பாதை 10 கோடி பவுண் செலவில் உருவாகவிருக்கிறது. இந்த ரயில் இணைப்புப் பாதைக்கான இப் பெருந்தொகை நிதி எவ்விதம் பெறப்படும் என்பது பற்றிய தெளிவான விபரம் தெரிவிக்கப்படவில்லை.

ஆனால், டார் எஸ் ஸலாமிலிருந்து கிடைக்கப்பெறும் செய்திகள், றயில் இணைப்புப்பாதையை அமைக்கும் பொறுப்பையும், அதற்கான செலவையும் சீனுவே ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டுள்ளதாகக் கூறுகின்றன.

## புயலுக்கு 5 பேர் பலி

லண்டன், செப். 6
பிரிட்டனில் வீசிய கடும் புயல் காரணமாக 5 பேர் கொல்லப்பட்டனர். தரை, விமான சேவைகள் தடைப்பட்டுள்ளன.

## ஜெனேவாவில் சீனக் கப்பல்

ஜெனேவா, செப். 6
இத்தாலியத் துறைமுகமான ஜெனேவாவில் பிரச்சார அட்டைகள் தாங்கிய சீனக்கப்பலொன்று. தனது பொருட்களை இறக்கத் தடை செய்யப்பட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

இச்சம்பவம் நடந்து இப்போது ஏறத்தாழ இரண்டு வாரங்களாகிவிட்டன.

தனது பிரச்சார அட்டைகளை அகற்றிய பிறகு, சீனக் கப்பல் நேற்றுத் தனது சரக்குகளை இறக்குமதி செய்ய ஆரம்பித்துள்ளதாக இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.





லீட்டா பூரண ஆடைப் பால் பவுடர், மேற்கு ஐரோப்பாவின் மிகப்பெரிய அதி பிரசித்த பால் தயாரிப்புத் தொழிற்சாலையிலிருந்து வருகிறது. ஹாலந்தின் அதிகபட்ச அபிமானம் மிகுந்த இதில் 28 சத விகிதம் பாற் கொழுப்பும் 26.7 சத விகிதம் புரதச் சத்தும் உண்டு.

லீட்டா பூரண ஆடைப் பால் பவுடர், உண்மையான முதற்றர பூரண ஆடைப்பால் தர வேண்டிய அனைத்தையும் தருகிறது: இருந்தும், வேறெந்த ரகப் பவுடரையும் விடக் குறைவான நியாய விலையில் உங்களுக்குக் கிடைக்கிறது.

ஏக விநியோகஸ்தர்கள்

மில்லர்ஸ்

லிமிட்டெட்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### கேள்வி விளம்பரம்

1967-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் [புரட்டாசி] 16-9-67-ம் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணி வரையும் வட்டுக்கோட்டைக் கிராமசபை அக்கிராசனரால் பதிவு செய்யப்பட்ட கொந்திராத்துக்காரர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடும் வேலைகளுக்குச் சீல் வைக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 15-9-67-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரையும் டெண்டர்ப்பணமாக ரூபா 25/-ம், டெண்டர்ப்பத்திரப் பணம் ரூபா 2/-ம் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். ஏனைய விபரங்கள் யாவும் எனது கந்தோரிலும், யாழ்ப்பாணம் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கந்தோரிலும் கந்தோர் நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

தா. சிவகுருநாதன்,
தலைவர்.
கிராமசபை அலுவலகம்,
வட்டுக்கோட்டை.

கிராமசபை அலுவலகம்,
வட்டுக்கோட்டை.
4-9-1967.

வேலையின் பெயர்கள்
1. அராலி வடக்கு மீன் பிடி றோட்டு.
2. சுறட்டிப்பனை அம்மன் கோவிலடி றோட்டு.

232

### மாப்பியன் மில்
மானிப்பாய்

மேற்படி மில்லுக்கு வேலையாட்கள் தேவை. நல்ல சம்பளம் சேமலாபநிதி, போனஸ் இவைகளும் நித்திய வேலையும் கிடைக்கும். மேற்படி மில்லுக்கு நேரில் வரவும். 227

### போட்டி முடிவுகள்

சுழிபுரம், புதன்

வலிகாமம் மேற்பிரிவு 11 விளையாட்டுக் கழகங்களின் விளையாட்டு விழாவையொட்டி நடைபெற்ற மரதன் ஓட்டச் சைக்கிள் ஓட்டப் போட்டி ஆகியவற்றிலும் வெற்றி பெற்றவர்கள்:

மரதன் ஓட்டம்; இ. இராசேந்திரன். அரசடி ச.சமூக நிலையம் பண்டத்தரிப்பு] பொ. கனகரத்தினம். [அரசடி ச.சமூக நிலையம் பண்டத்தரிப்பு] ஆ.ரவிசேகன் [அராலி விளையாட்டுக் கழகம்] க. மரியதாசன் சைக்கிள் ஓட்டம்: (பண்டத்தரிப்பு இருதய இளைஞர் சங்கம்) கி. பராபரன் .(சுழிபுரம் சூட்டிங் ஸ்டார்) இ.ஆனந்தராசா. (அராலி தெற்கு)

### மன்னர் ஹுசெயின்

அம்மான், செப். 6

ஜோர்தான் மன்னர் ஹுசெயின் துருக்கிக்கு விஜயம் செய்துள்ளார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
### வியாழன் 7-9-67

344 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-30 நாதாஞ்சலி. 6-35 சைவ நற்சிந்தனை- எம். வைரமுத்து.
6-40 இஸ்லாமிய நற்சிந்தனை - மௌலவி எச். சலாவுதீன்.
6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை.
7-45 திரை இசை. 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்
பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்பஇசை,

344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம்.
இரவு 6-15 தமிழோடிசை பாடல், 6-30 பேச்சு, 6-40 கிராமசஞ்சிகை 7-15 தாளவாத்தியக்கச்சேரி 7-45 நாடகம்சபதம் [2] பாலாம்பிகை நடராசா 8-00 முஸ்லீம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி- பரமேஸ்வரி விஜயரத்தின.

ஓடும் பஸ்ஸில்

### பெண்ணிடம் திருட முயன்றராம்

அக்கரைப்பற்று, புதன்

கடந்த 3-ம் திகதி மட்டக்களப்பில் நடைபெற்ற பொலிஸ் விளையாட்டு விழாவை முன்னிட்டுச் சேவையிலீடுபட்டிருந்த விசேஷ பஸ் ஒன்றில் பிரயானம் செய்த பெண் ஒருவரின் 'நெக்லஸ்' த்திருட முயன்ற தாகக் கூறி அதேபஸ்ஸில் பிரயாணம் செய்த நபர் ஒருவர் பஸ்டிப்போவில் ஒப்படைக்கப்பட்டார். அந்நபர் பிரயாணம் செய்கையில் பிரஸ்தாப பெண்ணின் கழுத்தில் கையை விட்டதாகவும் அப்பொழுது அப்பெண் கூச்சலிடவே பிரயாணிகள் இதுவிஷயத்தைக் கவனித்ததாகவும். இதுகாரணமாக பஸ் டிப்போவுக்குத் திருப்பப்பட்டு அந்நபரைப் பிரயாணிகள் அங்குஒப்படைக்கவே பின்னர் அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

## வல்வை இளைஞர் விளையாட்டுப்போட்டி

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித்துறை நெடியகாட்டு இளைஞர் விளையாட்டுகழகவருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டிவடமராட்சி காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினரான பருத்தித்துறை எம்.பி. திரு க. துரைரத்தினம் வெற்றி வீரர்களுக்கு பரிசு வழங்கினார். வல்வை பட்டின சபைத்தலைவர் திரு. வி. இரத்தின வடிவேலு கழகக் கொடியேற்றி வைத்தார்.

இப்போட்டியில் அப்புக்குட்டியா பிள்ளை இல்லம் 271 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், வேலும் மயிலும் 267 புள்ளிகளேயும் மோகனதாஸ் இல்லம் 238 புள்ளிகளையும் பெற்று இரண்டாம் மூன்றும்இடத்தையும்பெற்றுள்ளன.

சாம்பியன்கள்:

பெண் :-(பா.பிரிவு): எஸ். சாவித்திரி. [கீழ்ப்பிரிவு] வே.தெய்வக்கணி. [மத்திய பிரிவு] எஸ். கமலராணி.
ஆண்:-(பா.பிரிவு) வி. இராதாகிருஷ்ணன், வி. ஆனந்தமயில் (கீழ்ப்பிரிவு): இ. ரவீந்திரன் (மத்தியபிரிவு) :பி, லெட்சுமி காந்தன். ஏ. துரைசிங்கம். (மேற்பிரிவு ): வி. பொன்னம்பலம், எஸ். சிவனடியார்.] அதிமேற்பிரிவு]: வி: மோகனதாஸ்.

### புகலிடமளித்தவருக்கு சிறை

மன்னார் புதன்

எருக்கலம்பிட்டியை வசிப்பிடமாகக் கொண்ட 85 வயதுடைய செல்லக்கண்ணு என்பவர் சட்ட விரோதமாகக் குடியேறிய கறுப்பண்ணன், சின்னம்மா ஆகியோருக்குப் புகலிடமளித்தார் எனச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு மன்னார் பொலிசாரால் தொடரப்பட்டவழக்கில் செல்லக்கண்ணு குற்றத்தை ஒப்புக் கொண்டதால், மன்னார் நீதவான் திரு. பரமகுரு அவரை குற்றவாளியாகக் கண்டு இரண்டு வருடக் கடுழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

## வரிவிளம்பரம்

### திருமண அழைப்பு

இளைப்பாறிய திருநெல்வேலி விதானையார் திரு. கே. அருளம்பலம், காலஞ்சென்ற திருமதி அருளம்பலம் அவர்களின்மகன் கனகசுந்தரத்துக்கும் (ஆசிரியர், ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர்) நல்லூரைச் சேர்ந்த முத்துத்தம்பி தம்பதிகளின் புத்திரி பரமேஸ்வரிக்கும் (உதவி மருத்துவாளர், அரசினர் வைத்தியசாலை, கோப்பாய்) கோப்பாய் கந்த சுவாமி கோவிலில் செப்டம்பர் 9-ம் திகதி மாலை 5-45 — 6-30 மணிக்கிடையில் திருமணம் நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள் அன்பு அழைக்கப்படுகின்றனர்

335

### தேவை

விற்பனையாளர்கள்:
சுவெப்ஸ் குளிர்பானங்கள் சைக்கிளில் சேல்ஸ் செய்வதற்கு இளைஞர்கள் தேவை. நேரில் சந்திக்கவும். நந்தி இண்டஸ்றீஸ், 20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2345

### விற்பனைக்கு

நெற்காணி:
50 பரப்பு நெற்காணி, கோப்பாய் கோயிற் பற்று, நீர்வேலி, இறை, "ஒருக்கொம்பன் புளியடி" விற்பனைக்கு உண்டு. பிற விபரங்களுக்கு:- த. ஈஸ்வரன், கணக்குக் கிளை, கச்சேரி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 2344

### காணவில்லை

இன்சூரன்ஸ் ராக்ஸ்:
எமது சொந்தப் பாவிப்பிலுள்ள டிராக்டர் [25 ஸ்ரீ 1040] அதனுடன் கூடிய பெட்டி [55 ஸ்ரீ 2151] இவ்விரண்டின் இன்சூரன்ஸ் ராக்ஸ் தவறிவிட்டது. தயவுசெய்து இதைக் கண்டெடுத்துக் கொடுப்பவர்களுக்கு உரிய சன்மானம் வழங்கப்படும். விலாசம்: உரிமையாளர் வ. நல்லையா கோரதீவு றோட், தலங்கிழப்பு. 2346

கரப்பந்தாட்டம்

## கொழும்புகோஷ்டிக்கு வெற்றி
### மட்டுவில் கோஷ்டியை நடராசா திணறடித்தார்

யாழ்ப்பாணம், வியா.

கொழும்பு கொட்டாஞ்சேனை விளையாட்டுக் கழகத்திற்கும் மட்டுவில் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கைப்பந்தாட்டப் போட்டியில் கொழும்புக் கோஷ்டி மட்டுவில் கோஷ்டியை கடுமையான மோதலின் பின் 2—1 புள்ளிகளால் வெற்றியீட்டியது.

மட்டுவில் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்ற இக் காரசாரமான போட்டியில் கொழும்புக் கோஷ்டிக் காப்டன் எஸ். நடராசாவின் ஆட்டம் அருமையாக இருந்தது. கட்டத்துக்குக் கட்டம் அவரது மின்னல் அடிகள் எதிர்க் கோஷ்டியைத் திணறடித்துக் கொண்டிருந்தன. இவரது துரித ஆட்டத்தினலேயே கொழும்பு அதிக புள்ளிகளைப் பெற்று வெற்றி பெற முடிந்தது. மற்றும் இக் கோஷ்டியில் வெற்றிவேலு கனகராசா, சபாபதி, ரகு, திலகா, அம்பலவாணர் ஆகியோரின் ஆட்டம் பாராட்டக் கூடியதாயிருந்தது.

மட்டுவில் கோஷ்டிகடைசி நேரத்தில் நன்றாக ஆடி ஓர் ஆட்டத்தில் வெற்றி பெற்றது. இக்கோஷ்டியில் இராசதுரை, தர்மலிங்கம், சுப்பிரமணியம், பாலசுப்பிரமணியம், பழனி ஆகியோரின் ஆட்டம் அருமையாக இருந்தது. இப் போட்டிக்கு திரு பி. இராசரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். [வி. நி]

### திருமணம்

நிகழும் பிலவங்க வருஷம் ஆவணி மாதம் 23-ம் திகதி (8-9-67) வெள்ளிக்கிழமை மாலை 6 மணிதொடக்கம் 7 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் காலஞ்சென்ற திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் புதல்வி செல்வி புஷ்பவதி அவர்களுக்கும் திரு. க. பத்மநாதன (கூட்டுறவுப்பரிசோதகர்) அவர்களுக்கும் மணமகள் இல்லத்திற்கு அருகாமையில் உள்ள அரசடி விநாயகர் ஆலயத்தில் திருமணம் நடைபெறும். அத்தருணம் சுற்றத்தார், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேம்.

திருமதி. க. சுப்பிரமணியம்,
90, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
124


## இப்பொழுது நடைபெறுகிறது

கெபிடல் [கொட்டாஞ்சேனை] · பிளாஸா [வெள்ளவத்தை] · விஜயா [மட்டுநகர்]
விஜிதா [ஹட்டன்] · மொடர்ன் [பதுளை] · ஸ்ரீகிருஷ்ண [திருமலை]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

புதுமையான கதை! உணர்ச்சிமிக்க வசனம்!
காதிற்கினிய பாடல்கள்!
முழுவதும் ஒரு ஹாஸ்ய விருந்து!
ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், நாகேஷ்,
விஜயலட்சுமி, ரத்ன, மாதவி
நடித்த



# நாம் மூவர்

டைரக்ஷன்: ஜம்பு · பாடல்கள்: வாலி · இசை: என்.எம்.எஸ்.

2-வது மாதம்
இங்ஸ்லி [கொழும்பு] · வெம்பிளி [கண்டி]
மற்றும் 4 திரைகளில்
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி நடித்த
அன்பே வா

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 930
ஞாயிறு தினங்களில் 4காட்சிகள்
மனோஜ் குமார்
ஷர்மிலா தாகூர்
நடித்த
ஸவான் கி காட்டா
[ஹிந்தி]

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி
கே. ஆர். விஜயா
நடித்த
செல்வம்

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
MANOHARA
Daily at 4-45, 7-00 & 9-45
Kenneth Moore Lloyd Nolan
in
WE JOINED THE NAVY
Scope-Color

REGAL JAFFNA
Times 4-30 7-00 p. m.
9-45 p. m.
Rod Taylor &
Julie Christie
in
YOUNG CASSIDY


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணறு கலக்கியவர் கிணற்றுக்குள் பலி

## கம்பர்மலையில் சம்பவம்

இமையாணன், செவ்.

தண்ணீரைக் கலக்குவதற்காக கிணற்றுக்குள் இறங்கியவர் கிணற்றுக்குள்ளேயே மின்சாரம் தாக்கி மரணமானர். கம்பர்மலையைச் சேர்ந்த சுமார் 45 வயதுடைய வைரமுத்து துரைசாமி என்பவரே இப்பரிதாபத்துக்குள்ளானவராவார்.

தண்ணீர் இறைக்கும் இயந்திரம் மூலம் நீரை வெளியேற்றிக்கொண்டிருந்த தமது வீட்டின் கிணற்றுக்குள் துரைசாமி இறங்கினர் எனவும், இயந்திரம் நீர் இறைத்துக்கொண்டிருப்பதை மறந்துவிட்ட இவர் இயந்திரத்தின் பைப்பைத் தீண்டவே அவர் மின்சாரத்தில் தாக்குண்டு மரணமானதாகவும் கூறப்பட்டது.

வல்வெட்டித்துறைப் பொலிசார் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்தினர்கள்.

மட்டக்களப்பில்

## 'மின் விசிறியை "எலி" சாப்பிட்டது' — மேயர்

## 'சந்தைக் கட்டிடத்துக்கு கோழிக்கூடு விலையா?' —அங்கத்தவர்

அக்கரைப்பற்று, செவ்.

மட்டக்களப்பு மாநகர சபைக்கூட்டம் 2-ந் திகதி காலை சுமார் 10 மணியளவில் மேயர் திரு. இராஜதுரை தலைமையில் சபாமண்டபத்தில் நடைபெற்றது. கலரியிலுள்ள மின்விசிறி வேலை செய்யாததையிட்டு பொதுமக்கள் புகார் செய்ததைத்தொடர்ந்து அங்கத்தவர் ஒருவரின் கேள்விக்கு மேயர் திரு. இராஜதுரை பதிலளிக்கையில், மின்விசிறியின் இயந்திரங்களை எலி சாப்பிட்டுவிட்டதாகக் கூறினர். இதைத்தொடர்ந்து மக்கள் கலரியில் பலத்த சிரிப்பினிடையே "இரும்பையா லிதின்றது?" என்ற கேள்விக்கு மேயர் தலையை அசைத்து 'ஆம்' என்றுர் சிரித்துக்கொண்டே.

### 'கோழி' விலை

முடியும் தறுவாயில் இருக்கும் நவீனசந்தையின் கட்டிடத்தின் உடைந்த ஒரு கொங்கிறிட் துண்டை 6-ம் வட்டார அங்கத்தவரான திரு. சங்கரதாஸ் மாநகர சபைக் கூட்டத்தின் போது காட்டி கட்டிடத்திற்கு கோழிக்கூடுவலை பாவிக்கப்பட்டதை இத்துண்டின் மூலம் நிரூபித்தார். இதற்குத்தக்க நடவடிக்கையெடுப்பதாக மேயர் உறுதிகூறினுர்.

## அநுராதபுரம விவேகானந்தசபை புதிய நிர்வாகிகள்

அநுரதபுரம், புதன்

அநுராதபுரம் விவேகானந்த சபையின் 42வது ஆண்டுப்பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரியப்பட்டனர்.

பாதுகாவலர்கள்: ஸ்ரீமத். சுவாமி பிரேமாத்மானந்தா, திரு.எம், தம்பிராசா, திருமதி. த.சிற்றம்பலம், திரு. சி.கந்தசாமி, திரு.சி.மு. கந்தசாமி. தலைவர்: திரு.ச. நடராசா, துணைத் தலைவர்கள்: திரு.இரா. சதாசிவம் பிள்ளை, திரு.கா. ஜெகந்நாதன், டாக்டர். கே. மாணிக்கம், திரு. க.இராமச்சந்திரன், திரு.சி. சிவலோகன். நிர்வாகக்குழுத் தலைவர்: திரு.வா.சதாசிவம் பிள்ளை, பொதுச் செயலாளர்: திரு.ம.கணேசமூர்த்தி. துணைச்செயலாளர்: திரு.மு. நடராசா, பொருளாளர்: திரு.க. இராசரத்தினம். துணைப்பொருளாளர்: திரு. அ.வேல்முருகு. வாசிகசாலை நிர்வாகி: திரு. செ.பஞ்சலிங்கம், துணை வாசிகசாலை நிர்வாகி: திரு. செ. தர்மலிங்கம், கணக்குப் பரிசோதகர்கள்: திரு.க. இராசலிங்கம், திரு. தி. சுப்பையா. நிர்வாகக்குழு: திரு.க. சிவஞானம், திரு.செ. தனபாலசிங்கம், திரு பி. தியாகராசா, திரு வ. குமாரகுலசிங்கம், திரு க. விஞசித்தம்பி, திரு. வே. இரகுநாதன், திரு. எஸ். சண்முகராசா, முகாமைக்குழு: திரு.வே. இராசையா திரு.க. பசுபதிப்பிள்ளை, திரு.எஸ். குலேந்திரன், திரு.கே. தங்கராசா, திரு.பொ.சந்தோசம், திரு க.தேலுப்பிள்ளை, திரு. இ. கந்தையா, திரு.து. நடராசா.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால்யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு செப்டம்பர்மாதம்7-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## முன்னுள் எம்.பி. நினைவுவிழா

உடுப்பிட்டி, புதன்

பருத்தித்துறைத்தொகுதியின் முன்னுள் எம்.பி.யும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் முக்கிய பிரமுகருமான காலஞ்சென்ற திரு. தா. இராமலிங்கத்தின் 13-வது ஞாபகார்த்த விழா இம்மாத நடுப்பகுதியில்பருத்தித்துறை தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணித் தலைவர் வழக்கறிஞர் திரு, வி. பி. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும். இந் நினைவு விழாவில் வவனியா எம்.பி. திரு. தா. சிவசிதம்பரம். உடுப்பிட்டி எம். பி. திரு. மு சிவசிதம்பரம்ஆகியோர் கலந்துகொள்வர்.

## கேள்வி அறிவித்தல்

முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் கீழ்குறிக்கப்பட்ட பொருட்களுக்கு 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ந் திகதி பிற்பகல் 12 மணிக்கு முன்னதாகவோ அல்லது அதற்கு முன்னரோ என்ருல் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. தொகையான பழுதடைந்த பொருட்கள்.
2. 45கலன்வெற்றுமுடா-எண்ணிக்கை 71.
3. எஞ்சின் ஓயிலுடன் பழுதடைந்த முடா.

இப்பொருட்கள் யாவற்றையும் குருநகர், யாழ்ப்பாணம் ஐஸ்பிளான்ற் கட்டிடத்தில் பார்வையிடலாம்.

உதவி மனேஜர்,
இலங்கை கடற்றொழில்
கூட்டுத்தாபனம்,
யாழ்ப்பாணம்.

233

## இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், வியா.

மாரீசன் கூடல் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சிரமதான வேலை, மாரீசன் கூடல் சந்தியில் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் இன்று காலை நடைபெறவிருக்கிறது.

வலி. மேற்கு காரியாதிகாரி திரு. என். மாணிக்க நடராசா, கிராம முன்னேற்றச் சங்க மேற்பார்வையாளர் திரு. பாலசுந்தரம் ஆகியோர் உரையாற்றுவர்.

## யார் சிபார்சு. . .

[1ம்- பக்கத் தொடர்ச்சி]

நடத்தவேண்டுமென, முன்னுள் அங்கத்தவர்களில்சிலர் ஸ்தலஸ்தாபன மந்திரிக்கு எழுதியிருப்பதாகத் தெரியவருகிறது. வரியிறுப்பாளர்கள் சிலரும், வட்டாரப் பிரிவினை நடைபெற்ற பின்னரே தேர்தலை நடத்தும்படி கோரியுள்ளனராம்.

## இரவில் சிறகு. . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மீன்பிடி இலாகாவைச் சேர்ந்த திரு. சச்சிதானந்தன் ஆகியோர் உட்பட மீன்பிடிச் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

சிறகுவலைத் திருட்டு அதிகமாக இரவு 6 மணியிலிருந்து காலை 3 மணிக்கிடையிலே நடைபெறுவதாலேயே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது அத்துடன் குருநகர், பாஷையூர், சாவற்காடு, நாவாந்துறை ஆகிய இடங்களில் 15 பேரைக் கொண்ட ஒவ்வொரு நடவடிக்கைக் குழுக்களை அமைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு பொலிஸ் இன்ஸ்பெக்டர் தலைவராகவும் மீன்பிடி இலாகாவைச் சேர்ந்த ஒருவர் செயலாளராகவும் இருப்பதோடு 8 மீனவர்களும் அப்பகுதி கிராம சேவையாளரும் அதில் அங்கம் வகிப்பார்கள். இவை மாதாமாதம் கூடி தங்கள் பிரச்னைகளை ஆராய்ந்து மத்திய குழுவுக்குத் தெரிவிக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. மத்தியகுழுவின் பிரதிநிதிகளாக பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம், உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சி. தவராஜா, மீன்பிடி இலாகாவைச் சேர்ந்த தி. தங்கராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

இத்திருட்டை முற்ருக ஒழிக்க தற்போது ரோந்து சுற்றும் மீன்பிடி இலாகாவினருக்குச் சொந்தமான இயந்திரப்படகான 'குனிசு'வுடன் மேலதிகமாக இன்னுமொரு படகையும் அரசாங்கத்திடமிருந்து பெறுவதெனவும், ஒவ்வொரு கிராமத்து மீனவர்களின் சிறகுவலைகளுக்கும் தனித்தனி நிறங்கள் பூசுவதெனவும் ஒவ்வொரு வலைகளுக்கும் இலக்கங்கள் இட்டு, மீன்பிடிஇலாகாவில் அவைகளைப் பதிவுசெய்வதெனவும் இம்மகாநாட்டில் முடிவுசெய்யப்பட்டது. (ந. நி)

## பின் போடப்பட்டது

யாழ்ப்பாணம், வியா.

இம்மாதம் 9-ம் திகதி நடைபெறவிருந்த யாழ். மாவட்ட மாதர்சங்க சம்மேளன மகாநாடு காலவரையறையின்றிபின்போடப்பட்டுள்ளது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

சரசாலை கொலை வழக்கு

## வழக்கறிஞர்கள் நேற்று தொகுப்புரை நிகழ்த்தினர்கள்

### இன்று தீர்ப்பு வழங்கப்படும்

யாழ்ப்பாணம், வியா.

சரசாலை கொலைவழக்கில் எதிரி சார்பில் ஆஜரான திரு. ஜி.ஜி பொன்னம்பலமும், முடிக்குரிய வழக்கறிஞர் திரு. கே. இரத்தினேசரும் நேற்றுக்காலை தங்கள் தொகுப்புரையை முடித்துக்கொண்டார்கள். இன்று காலை நீதியரசர் திரு. மாணிக்கவாசகர் உரை நிகழ்த்தியபின் தீர்ப்பு வழங்கப்படும்.

இவ்வழக்கில் சரசாலையில் 67-ம ஆண்டு, பெப்ரவரி 19ம்தேதி, முன்னுள் கிராமசபை அங்கத்தவரும், உபதபாற்கந்தோர் அதிபருமான செல்லத்துரை பேரம்பலம், சந்தையா சிவகுரு அல்லது செல்லத்துரையைக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் வழக்கறிஞர் ஜி.ஜி. பொன்னம்பலம் பாரிஸ்டர்எம். சிவானந்தன் உதவியுடனும்,புறக்டர்எஸ் கே. திரவியநாயகத்தின் அனுசரணையுடனும் ஆஜரானுர். எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் கே, குணரத்தினம் நியமிக்கப் பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் கே. இரத்னேசர் ஆஜரானுர.

விசாரணையை பார்ப்பதற்கு பெண்கள் உட்படஏராளமானேர் கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் திரண்டிருந்தனர்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் எல். விஜயதிலகா கூறியதாவது:- தருமலிங்கத்தின் வாக்குமூலத்திலிருந்து இறந்தவரின் கால் தெற்குப்பக்கமாக இருக்கும் என எதிர்பார்த்தேன். நான் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றபோது இறந்தவரின்கால் வடக்குப் பக்க இருந்தது.

இன்ஸ்பெக்டர் விஜயதிலகா வழக்கறிஞர் ஜி. ஜீ. பொன்னம்பலத்தால் குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் மேலும் கூறியதாவது:- சம்பவம் நடந்த தினம் இரவு 8-30 மணிக்கு தருமலிங்கம் பொலிஸுக்கு முறைப்பாடு செய்தார். சம்பவம் நடந்த இடத்திற்கு இரவு 9-15 மணிக்கு இரு பொலிஸ்காரருடன் சென்றேன்.

வழ:- இறந்தவரின் கால் எந்தப்பக்கம் இருந்தது? -வடக்குப்பக்கம்

நீதி:- தருமலிங்கத்தின் முறைப்பாட்டைப் படித்தீரா?-ஆம்.

வழ:- எவ்வளவு நேரம் விசாரணை செய்தீர்? -நள்ளிரவு 1 மணி வரை

வழ;- சார்ஜன் அருளானந்தத்திடம் மற்ருெரு முறைப்பாடு பதியச்சொன்னீர்? ஆம்.

ஜி. ஜி. பொன்னம்பலம் தமது ஆசனத்தை விட்டெழுந்து வந்து அங்கிருந்த சயிக்கில் முன்பக்கத்தை அவதானித்தார்.

வழ:- சயிக்கில், லைட், மக்காட், பிடியில் இரத்தக் கறை இருக்கிறது?- ஆம்.

வழ:- இரத்ததுளி மேலிருந்து கீழ்நோக்கி வழிந்தோடியிருக்கிறது?

[சைக்கிளில் உள்ள இரத்தக்கறையை நீதியரசர் ஜூரி சபையினர் முடிக்குரிய வழக்கறிஞர் பார்வையிட்டனர். இன்ஸ்பெக்டர் இரத்தக்கறையை அவர்களுக்குச் சுட்டிக்காட்டினுர்.

வழ: சம்பவம் நடந்த ஒழுங்கை மிகவும் ஆழமான மணல் ஒழுங்கை? -ஆம்.

வழ: நீர் அந்த ஒழுங்கையில் சைக்கிள் ஓடுவீரா? -நான் அந்த ஒழுங்கையில் சைக்கிள் ஓடமுடியாமலிருக்கலாம்.

வழ: தர்மலிங்கத்தின் வாக்குமூலத்தில் இழுத்துச் சென்றதாக இருக்கிறது?!-ஆம்.

வழ: ஒழுங்கையில் இழுபட்ட அடையாளம் இருந்ததா?-இல்லை,

வழ: எவ்வித அடையாளமும்?-இல்லை.

நீதிய: கால் அடையாளம் ஒழுங்கையில் இருந்ததா-ஆம்.

வழ: ஆழமான மணலில் கால் அடையாளம் தெரியபடாது?- அந்த அடையாளம் கால் அடையாளத்தை குறித்தது.

வழ: ஒழுங்கையில் இரத்தத்துளிகள் அழிக்கப்படாமலிருந்தது?-ஆம்.

வழ: சிலேப்பை சயிக்கிளில் எப்படி இருந்தது? [பையை கையில் எடுத்துப்பார்த்து விட்டு] இது வல்ல அந்தப்பை.

நீதவா: இந்தப்பை எப்படி வந்தது?

முடி.வழ: இரத்தம் படிந்த வேட்டி சால்வையை இந்தப்பையில் சுற்றி யனுப்பப்பட்டிருக்கவேண்டும்.

வழ:மற்றப் பையிலும் இரத்தத்துளி மேலிருந்து கீழ் நோக்கி வந்திருக்கிறது?-ஆம்.

சாவகச்சேரி கிராம கோர்ட்டு கிளார்க் அருணசலம் சிவபாதம் எதிரி இறந்தவர் சம்பந்தப்பட்ட 7 வழக்குகள் கிராம கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டதாக கூறினுர். சார்ஜன் அருளானந்தமும் சாட்சியமளித்தார்.

யாழ். மாநகரசபை

## புதிய தேர்தலுக்கு கட்சிகள் முஸ்தீபு

யாழ்ப்பாணம் புதன்

கலைக்கப்பட்ட யாழ்ப்பாணம் மாநகர சபைக்குப் புதிய தேர்தல் இன்னும் நான்கு மாதங்களில் நடைபெறுமென்று உள்ளூராட்சி அமைச்சர் திரு எம். திருச்செல்வம் அறிவித்ததைத் தொடர்ந்து மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான முயற்சிகளில் அரசியல் கட்சிகளும் முன்னைய அங்கத்தவர்கள் பலரும் தீவிரமாக முனைந்துள்ளனர்.

மாநகரசபையின் சகல வட்டாரங்களிலும் தமிழ்க் காங்கிரஸ் போட்டியிடுமென காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான திரு. மு. சிவசிதம்பரம் தெரிவித்தார். தமிழ் அரசுக்கட்சியும் சகல வட்டாரங்களிலும் போட்டியிடுமெனத் தெரிகிறது. முன்னுள் மேயர் திரு. அல்பிரட் துரையப்பாவும் முன்னைய அங்கத்தவர் சிலரும் ஒரே அணியாகப் போட்டியிடு வார்களெனத் தெரிகிறது.

இதேசமயம் புதிய தேர்தலை மார்ட்டின் கமிஷன் சிபார்சுக்கிணங்க புதியவட்டாரங்களைப் பிரித்து நடத்தலாமென்றும் புதிய வட்டாரப் பிரிவிலுள்ள தவறுகளை பின்னர் சீர்செய்யலாமென்றும் முன்னுள் அங்கத்தவர்கள் சிலர் உள்ளூராட்சிச் சேவைக் கமிஷனுக்கு எழுதியுள்ளதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org